[1975 நவம்பர் 11

வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம்

*295 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த எடுத்துக்கட்டி—ஆத்துப்பாக்கம் கிராமத்தை இணைக்கும் வகையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

மறையூருக்குக் கப்பிச்சாலை அமைத்தல்

*296 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், சித்தர்க்காட்டில் "மாணவமணி தியாகி சாரங்கபாணி" ரயில்வே மேம்பாலத்திலிருந்து மறையூர்—கோவங்குடி வரை கப்பிச்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியம் சித்தர்க்காட்டில் "மாணவமணி தியாகி சாரங்கபாணி" ரயில்வே மேம்பாலத்திலிருந்து மறையூர்—கோவங்குடி வரை கப்பிச்சாலை அமைத்திடும் வேலைக்கு இனிமேலாவது அனுமதி வழங்கி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிலோமீட்டர் 1/4 லிலிருந்து 2/4 வரைக்கும் கருங்கல் ஜல்லி போடுவதற்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றியத்தால் அந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 2/4 லிலிருந்து 3/2 வரையில் 29 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தொடர்சாலை கப்பி போடுவதற்கு செயற்குறிப்பு எதுவும் இல்லை.
3/2 லிருந்து 4 வரையில் 1975-76 இல் மண்தரையில் கப்பி போடப்படுகின்ற பணிக்கு டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன.